


தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## மே தினத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். 2261வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், உழைக்கும் பராயத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளிற்கு நீதி கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மே நாளான நேற்று அதற்கான எதிர்ப்பை வெளியிட்டும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். குறித்த போராட்டம் காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக A9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

## வவுனியாவில் இடம்பெற்ற மே தின ஊர்வலம்



புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் பிரதான மேதினக் கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில் நேற்று (01) காலை இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடை வீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகரசபை மண்டபத்தை அடைந்தது. அங்கு மே தினக்கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத் தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். குறித்த ஊர்வலத்தில் கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தின கூட்டம் பொரள்ளை கேம்பல் மைதானத்தில், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் மக்கள் விடுதலை முன்னணியின் மே தின கூட்டம் கொழும்பு விஹார மகாதேவி பூங்காவிற்கு முன்பாக நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணிக்கு மருதானை, எல்பின்ஸ்டோன் திரையரங்கிற்கு அருகே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பேரணியில் கலந்துகொண்டார். கட்சியின் மே தின கூட்டம் ஏ.இ.குணசிங்க மைதானத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில் ஆரம்பமானது. இம்முறை கட்சியின் மே தினப் பேரணி கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக நடைபெற்றது.

## கிராம உத்தியோகத்தர் சேவைக்கு 60 வருடங்கள் நிறைவு




கிராம உத்தியோகத்தர் சேவை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 60 வருடங்கள் நிறைவடையும் நிலையில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக முன்பு சேவையாற்றிய மற்றும் தற்போது சேவையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் பணம் தீர்ந்துவிடும் - ஜேனட் யெலன்



அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜேனட் யெலன், கடன் உச்சவரம்பை உயர்த்தவோ அல்லது இடைநிறுத்தவோ தவறினால், ஜூன் 1 ஆம் திகதிக்குள் அமெரிக்காவில் பணம் தீர்ந்துவிடும் என்று எச்சரித்துள்ளார்.

கடன் வரம்பை எட்டினால் அமெரிக்க அரசாங்கம் இனி கடன் வாங்க முடியாது என்று அவர் கூறியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சிலிக்கான் வேலி வங்கி, சிக்னேச்சர் வங்கி ஆகியவை அடுத்தடுத்து மூடப்பட்டதால், அமெரிக்க சந்தையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

நெருக்கடி மேலும் பரவுவதைத் தடுத்து, சேமித்தவர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதம், கண்காணிப்பு நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ்விரு வங்கிகளுக்கு அவசர உதவிகள் வழங்கும் என்று ஜேனட் யெலன் கூறினார்.

மேலும், இத்தகைய அவசர உதவிகள் நிரந்தர நடவடிக்கையல்ல எனக் குறிப்பிட்ட அவர், வங்கிகளிலுள்ள அனைத்து சேமிப்புத் தொகைகளுக்கும் அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்காது என்றும் தெரிவித்தார்.

நெருக்கடி மேலும் பரவினால், வங்கிகளில் சேமிக்கப்பட்டிருக்கும் முழு தொகையையும் சேமித்தவர்கள் ஒரே சமயத்தில் திரும்பக் கேட்கும் அபாயம் உருவாகும் என்றும் யெலன் முன்னர் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பிரதமர் மீது செல்போன் வீச்சு



கர்நாடக பேரவைத் தேர்தல் பிரசாரத்துக்காக ஞாயிற்றுக்கிழமை மைசூருக்கு திறந்த வேனில் வந்த பிரதமர் மோடியின் வாகனத்தின் மீது பூக்களுடன் சேர்த்து வீசப்பட்ட செல்போன் பாஜக தொண்டருடையது என தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து கடந்த 2 நாள்களாக கோலார், ராமநகரம், ஹாசன் மாவட்டங்களில் பிரதமர் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். மைசூரில் திறந்தவேனில் ஊர்வலமாகச் சென்ற பிரதமரை சாலையின் இருபக்கங்களிலும் நின்றிருந்த பொதுமக்கள் உற்சாகத்தோடு பூக்களைத் தூவி வரவேற்றனர். அப்போது, அவர் மீது பூக்களுடன் சேர்த்து செல்போனும் வீசப்பட்டது.

அந்த செல்போன் அவர் மீது படாமல் வேன் ஓட்டுநர் அமர்ந்திருந்த கூரையின் மீது பட்டு கீழே விழுந்தது. இதைக் கண்ட பிரதமரின் பாதுகாப்பு அதிகாரி அதிர்ச்சியடைந்தார். பிரதமர் மோடியும் ஒரு கணம் என்ன நடக்கிறது என திகைத்தார். பின்னர், அதை பொருட்படுத்தாமல் ஊர்வலத்தை தொடர்ந்தார். கர்நாடகத்தில் 2 நாள்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை மைசூரில் இருந்து தனி விமானத்தில் தில்லி சென்றார். இதையடுத்து மைசூர் முழுவதும் போலீசார் உஷார்படுத்தப்பட்டு செல்போன் வீசியவரை போலீசார் தேடி வந்தனர்.

இந்நிலையில், மோடி வாகனத்தின் மீது வீசப்பட்ட செல்போன் பாஜக தொண்டருடையது என்றும், பிரதமர் மோடியை பார்த்த மகிழ்ச்சியில் பூக்களை தூவுவதற்காக கைகளை வேகமாக அசைத்தபோது கையில் இருந்து சென்போன் தவறுதலாக வீசப்பட்டுவிட்டது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. செல்போனை பறிமுதல் செய்து உள்துறை மற்றும் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, பிரதமர் மோடி வாகனத்தின் மீது செல்போன் வீசப்பட்ட சம்பவத்தை அடுத்து பாதுகாப்பை மேலும் பலப்படுத்த ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்தால் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அரச ஊழியர்களின் சம்பளத்தை 20,000 ரூபாவால் அதிகரிக்க கோரிக்கை

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை 20.000 ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கத்தின் தலைவர் எஸ்.லவகுமார் தெரிவித்தார். அம்பாறை மாவட்டம் கல்முனை தனியார் விடுதியில் மே தினத்தை முன்னிட்டு நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது. பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2000 க்கு அமைவாக கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுக்களில் தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஆலோசனைக் குழுக்களை தாவிப்பதன் மூலம் அவற்றின் காரியத்திறனையும் உற்பத்தி பெருக்கத்தையும் மேம்படுத்த செய்தல் வேண்டும். கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரச பேருந்துகளில் பயணிப்பதற்கான இலவச பஸ் பாஸ் நடைமுறையை அமுல்படுத்துமாறு மாகாண ஆளுநரை கோரல்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் பெண் அரச அலுவலர்களுக்கு மாதவிடாய் ஏற்படும் காலத்தில் ஒரு நாள் விசேட விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் விவகார அமைச்சர் மற்றும் அரச நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரை கோரல். மட்டக்களப்பு. அம்பாறை. திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச சேவையாளர்களுக்கு என தனியான வீடமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வீடமைப்பு அமைச்சை கோரல்.

வெளிக்கள கடமையில் ஈடுபடும் அரச சேவையாளர்களுக்கு கடந்த ஆட்சியின் போது சலுகை விலை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் வழங்காது புறக்கணிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான விசேட தர பதவியணியை ஏற்படுத்துவதன் மூலம் அச் சேவையினை வினை திறன் மிக்கதாக அரச நிர்வாகத்திற்கு பயனுள்ள வகையில் மாற்றி அமைக்க கோரல்.

ஆகியன உட்பட 14 அம்ச கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டதுடன் இலங்கை குடியரசின் ஜனாதிபதி. பிரதமர் நிதி அமைச்சர். விட அமைப்பு அமைச்சர் மகளிர் விவகார அமைச்சர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் பொது சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.புஹாது. பொருளாளர் க.நடராஜா. பிரதிப் பொதுச் செயலாளர் ஏ.சிபான். தாய் சங்க மத்திய குழு உறுப்பினர்களான பி.கோகுலோஜன். எஸ்.எல்.பசீல் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## பல இடங்களில் பிற்பகலில் மழை பெய்யலாம்

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல். சப்ரகமுவ. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் கண்டி. நுவரெலியா. காலி. மாத்தறை மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அனுராதபுரம் - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
மட்டக்களப்பு - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
கொழும்பு - மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
காலி - மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
யாழ்ப்பாணம் - மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
கண்டி - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
நுவரெலியா - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
இரத்தினபுரி - மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
திருகோணமலை - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்
மன்னார் - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
*(வளிமண்டலவியல் திணைக்களம்)*

## ஆர்எஸ்ஆர் அப்டேட் வெளியீடு




முதல் முறையாக ஆப்பிள் நிறுவனம் தனது வரலாற்றிலேயே முதல் முறை காரியம் ஒன்றை செய்திருக்கிறது. ஆப்பிள் நிறுவனம் முதல் முறையாக ரேபிட் செக்யுரிட்டி ரெஸ்பான்ஸ் (ஆர்எஸ்ஆர்) அப்டேட்டை வெளியிட்டுள்ளது.

பீட்டா டெஸ்டர்கள் மற்றும் டெவலப்பர்கள் மட்டுமின்றி இந்த அப்டேட் பொது மக்களுக்கும் வெளியிடப்பட்டு வருகிறது. ஐஓஎஸ் 16.4.1 மற்றும் ஐபேட் ஒஎஸ் 16.4.1 வெர்ஷன்களுக்கு இந்த ஆர்எஸ்ஆர் அப்டேட் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில். அடுத்த 48 மணி நேரத்திற்குள் இந்த அப்டேட் வெளியிடப்பட்டுவிடும். ஆர்எஸ்ஆர் அப்டேட்டை வெற்றிகரமாக இன்ஸ்டோல் செய்த பின் உங்களது ஐபோன் அல்லது ஐபேட்-இன் அபௌட் பகுதியில் ஐஓஎஸ் 16.4.1 (a) அல்லது ஐபேட் ஒஎஸ் 16.4.1 (a) என்று காண்பிக்கப்படும்.

ஆர்எஸ்ஆர் அப்டேட்கள் தானாகவே உங்களின் சாதனங்களில் இன்ஸ்டோல் செய்யப்பட்டு விடும். இதுபோன்ற அப்டேட்கள் அனைத்திற்கும் சாதனம் ரிஸ்டார்ட் ஆகாது. ஆனாலும் சில சாதனங்கள் ரிஸ்டார்ட் ஆகலாம். அப்டேட் இன்ஸ்டோல் செய்யப்பட்டதும். ரிஸ்டார்ட் செய்யக்கோரும் ஆப்ஷன் திரையில் தோன்றும்.

ஆர்எஸ்ஆர் அப்டேட்கள் தானாக இன்ஸ்டோல் ஆவதை தடுப்பதற்கான வசதி செட்டிங்ஸ்-இல் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால். இவ்வாறு செய்வது பரிந்துரைக்கப்படாத ஒன்றாகும். ஆர்எஸ்ஆர் அப்டேட்கள் மூலம் மிகமுக்கிய செக்யுரிட்டி மேம்படுத்தல்கள் வழங்கப்படும்.

இதுபோன்ற அப்டேட் பாதுகாப்பு எச்சரிக்கைகள் அல்லது செக்யுரிட்டி சார்ந்த பிரச்சினைகளை விரைந்து சரிசெய்யும் நோக்கில் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் சாதனத்தின் பாதுகாப்பு கருதி இந்த அம்சம் செயல்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதே சிறந்தது.

இன்றைய ஆர்எஸ்ஆர் அப்டேட் சில நிமிடங்களில் டவுன்லோட் மற்றும் இன்ஸ்டோல் ஆகிவிடும். இந்த அப்டேட் இன்ஸ்டோல் செய்தபின் சாதனம் ரிஸ்டார்ட் ஆகும். சமீபத்திய ஐஓஎஸ் மற்றும் ஐபேட் ஒஎஸ் கொண்ட சாதனங்களில் மட்டுமே ஆர்எஸ்ஆர் அப்டேட் வழங்கப்படும்.

## சட்ட அனுமதியுடன் கஞ்சா விற்பனை




தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்கொக்கில். வெளிநாட்டினர் மிக அதிக அளவில் பயன்படுத்தும் சுகும்விட் சாலையில் காண்போரைக் கவரும் வகையில் இந்த கஞ்சா விற்பனை நிலையம் அமைந்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் கஞ்சாவைப் பயன்படுத்த அந்நாட்டு அரசு அனுமதியளித்த நிலையில். கஞ்சா இலைகள். பூக்கள். விதைகள் மற்றும் சாக்லேட் வடிவில் போதை தரும் கஞ்சா உணவுகள் என பலவித தயாரிப்புக்கள் விற்பனைக்கு அறிமுகமாகியுள்ளன.

பாங்கொக்கில் பிபிசி அலுவலகத்திலிருந்து கிழக்கில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்துக்குச் சென்றால் 40 க்கும் மேற்பட்ட கஞ்சா விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளன.

இந்த விற்பனை நிலையங்களில் கஞ்சா இலைகள். விதை. தண்டுப்பகுதி. மற்றும் பூக்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பல வகையான தயாரிப்புக்கள் விற்கப்படுகின்றன.

இந்த இடத்திலிருந்து எதிர்திசையில் உள்ள காவோ சான் சாலையில் ப்ளான்டோபியா என்ற பெயரில் அமைந்துள்ள விற்பனையகத்தில். ஏராளமான வாடிக்கையாளர்கள் வெளிவிடும் புகையின் பின்னணியில் கஞ்சா தயாரிப்புகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கஞ்சா மற்றும் அதன் தயாரிப்புகளை விற்பனை செய்யும் இணையதளமான 'weed'. தாய்லாந்து முழுவதும் 4 ஆயிரம் விற்பனை நிலையங்கள் மூலம் ஏராளமான கஞ்சா தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது.

இதே தாய்லாந்து நாட்டில் கடந்த ஜூன் மாதத்துக்கு முன்பு கஞ்சா வைத்திருந்தால் 5 ஆண்டு சிறை தண்டனையும். அதை உற்பத்தி செய்தால் 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் விதிக்கப்பட்டு வந்தது.

போதைப்பொருள் தொடர்பான பிற குற்றங்களுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய மாற்றம் என்பது கற்பனைக்கு எட்டாத அளவில் இருக்கிறது.